# இந்து சமயத்தில் பழமொழிகள்

கலாநிதி (திருமதி) இ. கயிலைநாதன்

## ஆய்வுச் சுருக்கம்

*'இந்து சமயத்தில் பழமொழிகள்' என்னும் இவ்வாய்வுக் கட்டுரையின் முக்கிய நோக்கமானது எம் முன்னோர் தம் வாழ்வின் அனுபவங்களைக் கொண்டு ஆக்கித் தந்த பழமொழிகளையும் அப் பழமொழிகள் எவ்வாறு இந்து சமயத்துடன் தொடர்புடையனவாகவும், இந்துக்களின் பண்பாட்டினை வெளிப்படுத்திக் காட்டுவனவாகவும் அமைந்துள்ளன என்பதனை விபரித்துக் கூறும் ஒரு விபரண ஆய்வாகும்.*

### சமயமும் வாழ்வும்

இந்து சமயத்தில் மக்களது வாழ்வு வளம்பெறத் துணையாக இருப்பது சாஸ்திர ரீதியான சமய அறிவுரைகளே. சமயமும் வாழ்க்கையும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து பிரிக்க முடியாதிருப்பதை யாவரும் அறிவர். சமயம் வேறு; வாழ்க்கை வேறு என்று இந்துக்கள் என்றுமே எண்ணியதில்லை. எனவே தான் வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்க வேண்டியவற்றை நம் சமயத் தலைவர்கள் சமயம் என்பதன் ஊடாகக் கொடுத்திருக்கின்றனர். நம் முன்னோர்களின் வாழ்க்கை முறைகள் விதிகள், நிபந்தனைகள் எல்லாம் ஒன்றாகத் திரண்டு சமயம் என உருவெடுத்ததாக இருக்க வேண்டும் என்றால் மிகையாகாது.

மனிதனை மனிதனாக வாழ வைப்பது சமயம். மனிதன் பிறக்கும் போது உள்ளத்தாலும், உணர்வாலும் பூரணமடைந்தவனாகப் பிறப்பதில்லை. அவனுக்கு மனோவளர்ச்சியை ஏற்படுத்துவது சமயம் என்றே கூறலாம். நாளாந்த வாழ்க்கையில் மனிதன் பின்பற்றி நடக்க வேண்டிய கடமைகள் அல்லது நித்திய ஒழுக்கங்களை சமயத் தலைவர்கள் தந்துள்ளனர். அகத்தூய்மை அளிக்கும் அறங்களோடு உடல்நலம் பேணும் புறத்தூய்மையைப் பற்றியும் வலியுறுத்தியிருக்கின்றனர்.

ஆதியில் சமயம் தோன்றிய பொழுது அது ஒரு வாழ்க்கை நெறியாகத் தோன்றியது. சமயம் வேறாக வாழ்க்கை வேறாகப் பிரித்துப் பார்க்கப்படவில்லை. வைகறையிற் துயிலெழுதல், மஞ்சள்நீர் தெளித்தல், சாணி தெளித்தல், அல்லது சாணத்தால் மெழுகுதல் போன்றவை சமயத்துக்கும் வாழ்க்கைக்கும் பொருத்தமானதாக அமைகின்றன. இவ்வாறு மனிதனை வழிநடத்திச் செல்லும் சமயம் அவனை ஆசார ஒழுக்கங்களுடன் வாழ்வதற்காக சமய அறிவுரைகளுடன் கூடிய பழமொழிகளையும் தோற்றுவித்தது. இப்பழமொழிகளானவை மக்களது கலாச்சார பண்பாட்டு முறைகளுக்கு ஏற்ப மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகளையும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன என்றால் மிகையாகாது.

### சமயமும் பழமொழிகளும்

பழமொழிகள் என்பது மனிதனது வாழ்க்கையில் கிடைத்த அனுபவ மேலீட்டினால் தோன்றின. பழமொழிகள் மனித சமுதாயத்தின் ஒழுக்க வளர்ச்சிக்கும் பண்பாட்டுச் சீரமைப்புக்கும் சிந்தனைச் செழுமைக்கும் உறுதுணையாக விளங்கும் விசித்திரப் பொக்கிசங்கள் எனலாம். பண்டு தொட்டு வழங்கிவரும் பழைமை காரணமாகவும் பழுத்த அனுபவமொழிகள் எனும் அர்த்தத்திலும்

இக்கூற்றுக்கள் பழமொழிகள் என வழங்கப்படுகின்றன எனலாம்.

வாழ்வே சமயம், சமயமே வாழ்வு என்ற நிலையில் வாழ்வின் அனுபவங்களை எம் முன்னோர் மூதுரைகளாக ஆக்கித் தந்துள்ளனர். எனவே பெரும்பாலான மூதுரைகள் இந்துசமயத் தொடர்புடையனவாகவும், இந்துக்களின் பண்பாட்டினை வெளிப்படுத்திக் காட்டுவனவாகவும் அமைந்துள்ளன என்றால் நாம் மறுக்க இயலாது.

இவ்வுலக வாழ்வு இம்மை இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் தரக்கூடியதாக அமைய வேண்டும் என்பதே இந்து மதத்தின் கொள்கை. இந்த அடிப்படையில் தான் இந்துமதம் அறம், பொருள், இன்பம். வீடு ஆகிய நான்கு புருடார்த்தங்களையும் (உறுதிப் பொருட்கள்) பிரமச்சாரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் ஆகிய நான்கு வாழ்க்கைப் படிகளையும் அமைத்துத் தந்துள்ளது. இதன் செல்வாக்கு இந்துமக்களது பண்பாட்டில் நன்கு ஊறியிருப்பதையும் இந்துக்களாகிய தமிழ் மக்களின் அனுபவ வெளிப்பாடுகளான பழமொழிகளிலும் இதன் செல்வாக்கு நிறைந் திருப்பதையும் அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

இந்து மக்களது வாழ்க்கையில், இந்துமதம் வாழ்வு முழுவதுமே பின்னிப் பிணைந்து இருப்பதனால் பழமொழிகளில் இந்துசமயத்தின் தாக்கம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். பழமொழிகள் வாழ்விற்குத் தேவையற்ற ஒன்று என நாம் தட்டிக்கழிக்க முடியாதவை.

யாழ்ப்பாண இந்துசமயத்தவர்கள் வாழ்வில் பழமொழிகளின் பயன்பாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். சிறப்பாகச் சொல்லப்போனால் யாழ்ப்பாண சமுதாயத்தின் தமிழ்பேசும் மக்களால் சிறப்பாக இந்துக்களால் இத்தகைய பழமொழிகள் அன்றாடப் பேச்சு வழக்கில் வழங்கப்பட்டு வருகின்றன. தங்களது சமுதாயப் பண்பாட்டு ஒழுங்கமைப்புக்கு ஏற்றவாறு இவர்கள் பழமொழிகளைக் கையாண்டு வருகின்றனர். அதாவது மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் போதும், தங்களுக்கிடையே ஒருவர்க்கு ஒருவர் கருத்துப் பரிமாற்றம் செய்யும் போதும் பொருத்தமான சந்தர்ப்ப சூழ்நிலையில் பொருளுணர்ந்து இப்பழமொழிகளைப் பயன் படுத்தி வருகின்றனர் என்பது நாம் யாவரும் அனுபவ வாயிலாக அறிந்ததே. தம்மையறியாமலே இத்தகைய பழமொழிகளை ஆசிரியர்கள் மாணவர்க ளிடத்திலோ, தாய் தந்தையர் பிள்ளைகளிடத் திலோ, பெரியோர் சிறியோரிடத் திலோ அன்றாட வாழ்வில் கையாண்டு வருவதை நாம் காணக்கூடியதாய் உள்ளது. அத்துடன் விரித்துக் கூறவேண்டிய சில விடயங்களைப் பழமொழிகள் மூலம் எளிதாகவும், சுவையாகவும் கூறி விடுவார்கள். இன்னும் தாம் கொண்டுள்ள கருத்தை அழுத்தமாகவும் சுருக்கமாகவும் கூறுவதற்கு இத்தகைய பழமொழிகளைப் பெரிதும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்துசமயச் செல்வாக்கிற்கு உட்படுத்தப் பட்ட எல்லாப் பழமொழிகளையும் எடுத்துப் பரந்துபட்டளவில் ஆய்வு செய்வதற்கு இக்கட்டுரை இடம்தரா என்கின்ற காரணத்தால் இந்துக்கள் பரந்துபட்டு வாழும் பகுதிகளில் ஒன்றான யாழ்ப்பாணத்தில் இந்துசமய மக்கள் மத்தியில்அவர்களது வாழ்க்கையில் ஊறிப் போன பின்னிப் பிணைந்து இருக்கின்ற சமய சம்பந்தமான அறிவுரைகள் அடங்கிய சில பழமொழிகளை மாத்திரம் எடுத்து அப் பழமொழிகள் எவ்வாறு இந்து சமயத்தவர் களுக்கு இந்து சமயதத்துவக் கருத்துக்களை விளக்கிக் காட்டுகின்றன என்பதனை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பழமொழிகளில் இந்துசமயச் செல்வாக்கு**

இந்துப் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்டு வரும் பழமொழிகளைக் கடவுள், ஆலயம், தானதர்மம், விதி, மனச்சாட்சி, செய்நன்றி மறவாமை, பேராசை, ஒழுக்கம், சுகாதாரம், வாய்மை, பொறுமை, சோதிடம் போன்ற அம்சங்களின் அடிப்படையில் நோக்கலாம்.

இறைவழிபாடு இம்மை – மறுமை என்னும் மனித வாழ்வின் இருமைக்கும் அஸ்திவாரமாக அமைவதை அனுபவித்து உணர்ந்தவர்கள் இந்துக்கள். எனவே தான் போலும் கடல் கடந்து சென்ற இடங்களிலும் கூட நம் இந்துக்கள் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற தங்கள் மூதாதையர்களது உபதேசத்தை மறவாமல் இந்துக் கோயில்கள் பல கட்டி வழிபட்டு வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் யாவரும் அறிவோம்.

"எல்லாம் வல்லவன் இறைவன்" என்ற நம்பிக்கை கொண்ட மக்களுடைய சமுதாயம் எமது இந்து சமுதாயம். பழம்பெருமை வாய்ந்தது எமது இந்துசமயம். என்று மக்கள் சேர்ந்து வாழத் தொடங்கினார்களோ அன்றே கடவுள் வழிபாடும், கூட்டு வழிபாடும் தோன்றியிருக்க வேண்டும். மனிதனை மனிதனாக வாழ வைப்பது கடவுள் நம்பிக்கை. தமிழ் மொழியில் காணப்படும் பழமொழிகளும் கடவுள் நம்பிக்கையும் கோயில் வழிபாட்டையும் மக்கள் மத்தியில் வலியுறுத்துவனவாகவும் வளர்த்தெடுப்பனவாகவும் அமைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

**"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"**
**"திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை"**

போன்ற பழமொழிகள் கடவுள் நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்துபவை. கடவுள் இருக்கும் இடம் கோயில், ஆன்மா இலயிக்கும் இடம் ஆலயம். எனவே தான்நம் மூதாதையர் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றனர். இப் பழமொழி ஊர்கள் தோறும் ஆலயங்கள் இருக்க வேண்டும் என்பதனை மக்களுக்கு வலியுறுத்துகின்றது. கோயிலின் அவசியம் என்ன என்பதனை நாவுக்கரசரின் பின்வரும் தேவாரம் அறிய வைக்கின்றது.

**"திருக்கோயிலில்லாத திருவிலூருந்**
**திருவெண்ணீறணியாத திருவிலூரும்**
**பருக்கோடிப் பக்திமையாற் பாடா ஊரும்**
**பாங்கினொடு பலதளிகளில்லா ஊரும்**
**விருப்போடு வெண்சங்கமூதா ஊரும்**
**விதானமும் வெண் நொடியுமில்லா ஊரும்**
**அருப்போடு மலர் பறித்திட்டுண்ணா வூரும்**
**அவையெல்லா மூரல்ல வடவி காடே"**

கோயில் கட்டி வழிபாடு செய்யாத ஊரெல்லாம் ஊர்கள் அல்ல. அடர்ந்த காடே ஆகும். ஏனெனில் அங்கு வாழும் மக்கள் கடவுள் நம்பிக்கையும் கோயில் வழிபாடும் இல்லாமையால் கொடிய காட்டில் வாழும் விலங்குகளின் குணங்களை உடையவர்களாக விளங்குவார்கள். எனவே அவ்வூர் மனிதப் பண்புள்ள மக்கள் வாழும் ஊர்கள் அல்ல. அவை கொடிய விலங்குகள் வாழும் அடர்ந்த காடுகள் ஆகும் எனக் கூறும் அப்பர் சுவாமிகள்.

**"ஆக்கையாற் பயனென் அரன்**
**கோயில் வலம் வந்து**
**பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இல்**
**ஆக்கையால் பயன் என்"**

என நமக்கு உடல் கிடைத்ததே கோயில் வழிபடவேயாம் என எடுத்துக் காட்டுகின்றார்.

இயற்கையை இறைவனாகக் கண்டவர்கள் இந்துக்கள். சிந்துவெளி நாகரிக காலத்தில் இருந்தே இப்பண்பைக் காணலாம். இவ் வியற்கையானது ஐம்பூதங்களாய் அமைந்துள்ளன. கடவுளாகப் பார்ப்பதற்கு அது இறைவனாகவும்,

அதனை வேறுபடுத்திப் பார்ப்பதற்கு பஞ்ச பூதங்களாகவும் தெரியும். இத் தத்துவக் கருத்தைத் தோத்திரமாகவும், சாத்திரமாகவும் போற்றப்படும் திருமந்திரம் பின்வருமாறு கூறுகிறது.

"மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்துள் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதமே"

இயற்கையும், இறையும் பற்றிய இச் சமய தத்துவத்தை வெளிப்படுத்தும் "நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணேன்" எனும் பழமொழி நாமெல்லாம் அறிந்ததே.

இல் வாழ்க்கை என்பது இந்துப் பண்பாட்டில் மிக முக்கியமானதும் மிகவும் பொறுப்பு வாய்ந்ததுமான ஒன்றாகும். சமூகத்தின் மூன்று நிலைகளில் உள்ள பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகியோருக்கு தேவையானவற்றைக் கொடுக்க வேண்டியது இல்வாழ்வான் கடன். அவன் தேடும் பொருள் எறும்பு முதல் பிதிர் வரை பயன்பட வேண்டியது. எனவே தான் மனுதர்ம சாஸ்திரம் இல்வாழ்வான் மூச்சுக் காற்றுப் போன்றவன் என்கின்றது. உபநிடதம் "அதிதி தேவோ பவ" என்கின்றது வள்ளுவரும்

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்றதுணை"

(இல் வாழ்க்கை : 41)

என்கிறார், ஔவைப் பிராட்டியார் "அறம் செய்ய விரும்பு" என்றார். "செய்" என்று ஆணையிடவில்லை. "விரும்பு" என்றே கூறுகின்றார். காரணம் செய்ய முடியாதவரும் இருக்கலாம். அவர் விரும்பினால் போதும் அதுவே கருணையாகும்.

"இல்லாமை கொடுமையல்ல இயலாமை குற்றமல்ல விரும்பாமையே பாவமாகும்" என்றார் கவிஞர் கண்ணதாசன். எனவே பொருள் தேடும் கடமைஒன்று இல்வாழ்வானுக்கு உண்டு. பழமொழிகளும் ஈகை பற்றிப் பல்வேறு கருத்துக்களை எமக்குத் தருகின்றன. தானம் கொடுப்பவர்க்கும் இரப்பவர்க்கும் அறிவுரை களை மூதுரைகள் மூலம் நம் மூதாதையர் விளக்குகின்றனர். முதலில் "தர்மம் தலை காக்கும்" என்கின்றது ஒரு பழமொழி. இது ஒருவரைத் தான தர்மம் செய்யத்தூண்டு கின்றது. அதே நேரம் தேவையற்றவர்களுக்குக் கொடுத்து அவர்களை சோம்பேறிகள் ஆக்கு வதையும் இந்துமதம் விரும்பவில்லை.

"உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து" என்றார் வள்ளுவர்

(செய்ந்நன்றியறிதல் : 105)

ஏதோ உதவி செய்ய வேண்டும் என்று நீ எல்லோர்க்கும் செய்துவிடாதே. யாருக்குச் செய்கிறோம் என்பது முக்கியம் என்றார் அவர். அதாவது நன்றி உள்ளவனுக்கு, உண்மை யாகவே தேவைப்படுகின்றவனுக்குச் செய்யப்பட வேண்டும் என்பது அவர் கருத்து. இதனை வெளிப்படுத்துவதாக "பாத்திரமறிந்து பிச்சை போடு" என்னும் பழமொழி வழக்கில் உள்ளது. இன்னும் தானம் கொடுப்பவன் ஆரவாரமற்றுக் கொடுக்க வேணும் என்பதற்காகத் தோன்றியதே

"அரைக் கொத்தரிசி அன்னதானம்
விடியவிடிய மேளதானம்" என்னும் பழமொழி மகாபாரதத்தில் கர்ணன் தன் வலது கை கொடுப்பதை இடதுகையறியாது தானம் கொடுத்தான் என வர்ணிக்கப்படுகிறது. அதே நேரம் இருப்பதை மற்றவர்களுக்குக் கொடுத்து விட்டு கொடுத்தவன் தனக்கு ஒன்றும் இல்லாமல் இருக்கக்கூடாது என்பதிலும் நம் மூதாதையர் கவனமாக இருந்தனர் என்பதனைக் காட்டுகிறது.

"தனக்கு மிஞ்சித்தான் தானம்"
"ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு"

என்கின்ற பழமொழிகள். தானம். பெறுபவரும் மற்றவர் மதிக்கும்படி செல்ல வேண்டும் என்பதனைக் காட்ட "இரக்கப் போனாலும் சிறக்கப் போ" என இரப்பவர்க்கு அறிவுறுத்துவதாக இப்பழமொழியையும், அது மாத்திரமல்லாமல் இரப்பவர் இது தான் எனக்குத்தா எனக் கேட்கக்கூடாது கொடுப்பதை வாங்குவதே நல்லது என்பதனை காட்ட "தானம் கொடுத்த மாட்டை பல்லைப் பிடுங்கிப் பார்க்காதே" என்ற பழமொழியும் அமைந்துள்ளது. தானம் செய்பவர் தான் தகுதியான வர்க்குத்தானம் செய்வது மட்டுமல்லாமல் தானம் பெறுபவர்களும் தகுதியானவர்களிடம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை "பிச்சை வேண்டாம் நாயைப்பிடி" எனும் பழமொழியையும் கொண்டு நம் மூதாதையர்கள் அறிவுறுத்தல்களைச் செய்துள்ளார். இந்துதர்ம சாஸ்திரங்கள், இலக்கியங்கள் எவ்வாறு தானம் பற்றிய கருத்துக்களைக் கூறுகின்றனவோ அதே போன்று பழமொழிகளும் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கின்றன.

கன்மம், மறுபிறப்புக் கோட்பாடு போன்ற வற்றில் உறுதியான நம்பிக்கை கொண்டவர்கள் இந்துக்கள். ஓர் ஆன்மா தான் செய்த செயல்களுக்கு ஏற்ப பிறவி எடுத்து அவற்றை அனுபவிக்கும் என்பது உபநிடத காலத்தில் இருந்து பேசப்படுவது. செய்தவினை அதே வடிவத்தில் திரும்ப வரும் என்று போதிக்கிறது இந்துமதம். ஓர் ஆன்மா தான் செய்து அனுபவியாது எஞ்சி இருக்கும் வினைத் தொகுதியை சஞ்சிதம் எனவும், அதில் இருந்து இந்த உடலுடன் அனுபவிக்க எடுத்துத் தரப்பட்டது பிராரப்தம் எனவும் புதிதாக நாம் செய்வது ஆகாமியம் எனவும், சைவசிந்தாந்தம் கூறுகிறது.

இந்தப் பிறவியில் நாம் அனுபவிக்கும் கன்மங்களை எமக்கு தருபவர் இறைவன். அவ்வாறு எமக்கு வரும் இன்ப துன்பங் களுக்குக் காரணமான கன்மத்தை விதியென்கிறோம்.

இதனை வள்ளுவரும் ஊழ் என்னும் அதிகாரத்தில் விளக்கிக் கூறுகின்றார்.

**"அளந்தது அவ்வளவு தான்"**
**"தன்வினை தன்னைச் சுடும்"**
**"வினை விதைத்தவன் வினையறுப்பான்"**
**"எல்லாம்அவன் செயல்"**
**"கெடுவான் கேடு நினைப்பான்"**
**"நாய்க்கு நடுக்கடலிலே போனாலும் நக்குத் தண்ணீர்தான்"**

எனும் பழமொழிகள் விதி பற்றிய இந்துக்களின் நம்பிக்கையை வெளிக்காட்டு கின்றன. "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்கிறது புறநானூறு. நாம் செய்த கன்ம பலன் சில உடனே கிடைத்துவிடும் என்பதனை "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" எனும் பழமொழியும், சில கன்ம பலன்கள் காலம் சென்று கிடைக்கும் என்பதனை "அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்" எனும் பழமொழியும் எடுத்துக் காட்டுகின்றன.

எமது துன்பங்களுக்கு நமது செயல்களே காரணம் என்பதனை "கேடு வரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" எனவும் அதே போன்று நாம் செய்த நல்வினைப் பயனாக இன்பமும் வந்து சேரும் என்பதனை "கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்" எனவும் பழமொழிகள் விளங்க வைக்கின்றன.

நாம் எதையும் திட்டமிட்டபடி முயற்சி செய்தாலும் எம் விதிப்படியே அதன் பலன் நல்லதாகவோ தீயதாகவோ அமையும். இதனை விளக்குவதாக "நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்" எனும் பழமொழி அமைகின்றது. ஊழ்வினையின் பலத்தைக் காட்ட வள்ளுவரும்

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்"

(ஊழ் : 380)

என்றார். இப்படிப்பட்ட வலிமை வாய்ந்த ஊழ்வினையை இடையறாது முயற்சி செய்தால் வெல்ல முடியும் என்ற இவ்வுயர்ந்த தத்துவத்தையே "விதியை மதியால் வெல்லலாம்" எனும் பழமொழி விளக்குகிறது.

ஒருவன் இம்மை மறுமை இன்பம் பெறும்படி நல்வழி நடப்பதற்கான வழியைக் காட்டுபவர் குரு. அவர் காட்டிய வழியில் கணவன் நடக்கத் தோள் கொடுப்பவள் மனைவி. இவ்விருவரும் சரியானவர்களாக அமையாவிடில் இவ்வுலக சந்தோசமோ மறுமை இன்பமோ அடைதல் அரிது. இவ்வாறான இருவரும் ஒருவர்க்கு ஒருவர் கிடைப்பதே விதிப்படி தான் என்பதனை "தாரமும் குருவும் தலைவிதிப்பயன்" எனும் பழமொழி வெளிப்படுத்துகின்றது. இந்துமத வாழ்வியல் ஒழுக்கங்களை நெறிப்படுத்துவதில் பழமொழிகளின் பங்கை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இந்துக்கள் இறைநம்பிக்கை மிக்கவர்கள் அதன் வழிநின்று வாழ்க்கை நடத்துபவர்கள் இம்மக்கள் ஆசார சீலர்களாக வாழ்வதற்காக இந்துமதம் ஒவ்வொரு மனிதனும் தங்களது மனதைக் கோயிலாக எண்ண வேண்டும் எனவும், அம் மனதை தூய்மையாக அதாவது கொலை, களவு, காமம் போன்ற தூர்க்குணங்கள் இன்றி வைத்திருக்க வேண்டும் எனவும் கூறுகின்றது. ஒருவர் தன் சமூகத்திற்குத் தெரியாத வழியில் ஒரு குற்றத்தைச் செய்யலாம். ஆனால் அவரது மனம் அவரை ஒவ்வொரு நிமிடமும் சொல்லிக் காட்டிக் கொண்டிருக்கும். ஒருவர் தன் மனம் அறியாது எந்தக் குற்றத்தையும் செய்ய முடியாது. எனவே தான்

"குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்"
"தன் குற்றம் தனக்கே தெரியும்"

என்னும் பழமொழிகள் ஒருவரது மனமே அவருக்கு எதிராக சாட்சி சொல்லும் என்பதனை வெளிக்காட்டுகின்றன. எப்போதும் தீங்கு புரியாத தூய மனம் கொண்ட ஒருவரது முகம் அழகு இல்லாவிடினும் தெளிவாகவும் தெய்வீகத்தன்மை பொருந்தியதாகவும் இருக்கும் என்பதனை யாவரும் அறிவர். இதனை வெளிப்படுத்துவதாகவே "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்னும் பழமொழி அமைகின்றது. நாம் எண்ணுகின்ற எண்ணங்கள் உயர்வாக இருக்க வேண்டும் என வள்ளுவர்

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து" என்றார்.

செய்நன்றி மறக்கக் கூடாது. அது ஒரு பெரிய துரோகமான செயல் என்றெல்லாம் இந்துமதம் போதிக்கின்றது. ஒருவர் செய்கின்ற நன்மையை ஏழேழு பிறவி எடுத்தாலும் மறக்கக் கூடாது என நம்புபவர்கள் நம் மூதாதையர். வள்ளுவரும்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

(செய்ந்நன்றியறிதல் : 110)

என்றார். ஒருவர் எந்த வகையான அறத்தை அழித்தவர்க்கும் மன்னிப்பு உண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்கு உய்வே இல்லை என விளக்குகின்றது இக்குறள். இதனையே நம் மூதாதையர்

"அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே"
"உப்பிட்டவரை உள்ளளவும் நினை"
எனும் பழமொழிகள் மூலம் வெளிப்படுத்து கின்றனர்.

நிலையாமையை எண்ணி விரும்பாமையைக் கைவிடு என இந்துமதம் நிலையாமையைப் போதிக்கின்றது. பரம்பொருள் மீது பற்றுவை, நிலையற்ற பொருள்களின் மீது ஆசை வராது என்கின்றது இந்துமதம். வள்ளுவரும்

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்றுவிடற்கு" என்றார்

(துறவு : 350)

உலகியல் வாழ்க்கையில் அதிகம் பற்றுவைக்கக் கூடாது எனவும், அதனால் வாழ்க்கையில் துன்பமே அதிகம், இன்பம் இல்லை எனவும் விளக்க வைக்கின்றார். எனவே தான் நம் மூதாதையரும்

"பேராசை பெரும் தரித்திரம்"
"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு"

போன்ற பழமொழிகள் மூலம் ஒருவர் பேராசை கொள்ளக் கூடாது எனவும் எதிலும் திருப்தியாக இருக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்துகின்றனர்.

இந்துக்களின் வாழ்வில் ஒழுக்கம் மிகவும் பேணிப் பாதுகாக்கப்படும் ஒன்று. ஒருவன் வாழ்வைக் கொண்டு செல்லவே கல்வி. சமய நூல்களையும் நீதி இலக்கியங்களையும் கற்றவன் அதன்படி வாழ்க்கையில் ஒழுக வேண்டும். ஒன்று கற்று அதன்படி ஒழுகாது ஒருவன் அதர்ம வழியில் செல்லக்கூடாது என்பதை "படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்" என்னும் பழமொழி எடுத்துக் காட்டுகின்றது.

ஒருவனது வாழ்வில் ஒழுக்கமானது உயிரினும் மேலானதாக உலகத்தாரால் கருதப்படுகின்றது. நல்லொழுக்கம் உள்ள வர்களின் சேர்க்கையை உயர்வாகக் கருதும் நம் மூதாதையர்களும் "பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்" என்னும் பழமொழி மூலம் எடுத்துக் காட்டுகின்றனர். மகாபாரதத்தில் கர்ணன் சிறந்த குண இயல்புகள் உள்ள ஒருவனாக இருந்தும் துரியோதனன் ஆகியோரின் சேர்க்கையால் அழிந்து போகின்றான்.

இந்துமதம் பிறந்த காலத்தில் இருந்தே மதுவுக்கு எதிராக வாதாடிப் போதிக்கின்றது. குடியைப் பற்றிச் சொல்லுகின்ற புராண இதிகாசங்கள் ஏராளம். வள்ளுவரும் சுருக்கமாக "நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்பார். நம் மூதாதையர் "குடி குடியைக் கெடுக்கும்" என்று வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

உபநிடத காலத்தில் இருந்தே வாய்மையைப் போற்றிப் புகழ்ந்து வரும் பெருமை இந்து மக்களுக்கு உண்டு. "சத்யம் வத" என உபநிடதம் கூறுகின்றது. வள்ளுவரும் "பொய்யாமை அன்ன புகழில்லை" என்றார். "உண்மையின் பேர் தெய்வம் என்போம்" என்றார் பாரதியார்.

நம் முன்னோரும் வாய்மைக்கு முக்கியத்தவம் கொடுத்துப் பொய்யாமையை நீக்கி வாழ வேண்டும் என்பதனை விளக்குமுகமாக

"பொய் சொன்ன வாய்க்குப்
பொரியும் கிடையா"
"பொய்யும் புரட்டும் சிரட்டையும் கையும்"

என்ற பழமொழிகள் மூலம் விளக்கினர். அனுபவத்தின் குழந்தைகளான பழமொழிகள் நடைமுறைச் சாத்தியமானவற்றையே சொல்லு

கின்றன. எனவே நாம் உண்மை பேசபவரிடத்து அது நல்லவர்கட்கு தீமை பயக்குமாயின் அந்த இடத்துப் பொய்யையும் சொல்லலாம் எனச் சிந்திக்க வைக்கிறது "பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லு" என்னும் பழமொழி. வள்ளுவரும்,

**"பொய்மையும் வாய்மையிடத்து**
**புரை தீர்க்க நன்மை பயக்குமெனின்"**
**(வாய்மை :292)**

எனும் குறள் மூலம் உண்மை பற்றிய இக்கருத்தை எடுத்துக் காட்டுவது சிறப்பாக உள்ளது.

சுத்தம், சுகாதாரம் என்பன இந்துக்களால் நாள் தோறும் பேணிப் பாதுகாக்கப்படுகின்ற ஒன்று. சுகாதாரம் ஆதாரம் போன்றது. ஒருவன் துயிலெழுதலிலிருந்து இரவு படுக்கைக்குப் போகும்வரை செய்ய வேண்டிய நித்திய கரும விதிகளை ஆறுமுகநாவலர் நுணுக்கமாகவும், அழகாகவும் விளக்கிக் கூறியுள்ளார். இந்துக்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக இருக்க வேண்டும் என்பதே இந்துமதத்தின் அடிப்படை நோக்கமாகும். இந்த அடிப்படையிலேயே மக்களும் தங்களையும் தங்கள் குழந்தை களையும் ஆசார சீலர்களாகப் பேணிப் பாது காக்கின்றனர். சுத்தமாகவும், சுகாதாரமாகவும் மக்கள் வாழ வேண்டும் என்பதற்காக நம் முன்னோர் கூறிவைத்த விதிமுறைகள் எவ்வளவு சுகாதாரத்திற்கு உகந்தவை என விஞ்ஞானங்களும் எடுத்துக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக வீட்டைப் பெருக்குதல், மஞ்சள் நீர் தெளித்தல், சாணம் தெளித்தல் அல்லது சாணத்தால் மெழுகுதல் என்பன நம் முன்னோரின் நித்திய கருமங்களில் உள்ளன. இம் முறைகள் சுகாதாரத்திற்கு எவ்வளவு உகந்தவை என ஒருவர் எண்ணிப் பார்க்கும் போது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கின்றது. மஞ்சள், சாணம் போன்றவை கிருமிநாசினி போன்றவை. இவற்றினால் வீடு, வீட்டுச் சுற்றாடல்கள் ஆகியவற்றினைச் சுத்தம் செய்வதால் ஒருவர் வாழும் இடம் சுகாதாரமயமாக்கப்படுகின்றது. சுத்தம், சுகாதாரம் பாதுகாக்கப்படுவதால் ஒருவர் நோயின்றி நீண்ட ஆயுளுடன் வாழலாம். ஔவையாரும் "நோய்க்கு இடம் கொடேல்" எனக் கூறுகின்றார். நோய்க்கு இடம் கொடுக்கக் கூடாது என அவர் வலியுறுத்துவதற்குக் காரணம் மக்கள் சுத்தமாக வாழப்பழக வேண்டும் என்பதேயாகும். இவற்றை வெளிக்காட்டும் பழமொழிகளாக

**"சுத்தம் சுகம் தரும்"**
**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**

போன்றவை காட்டப்படுகின்றன. இன்னும் இந்துமதமான ஒருவர் தினமும் நீராடித் தோய்த்து உலர்ந்தஆடை அணிந்து திருக்கோயில்களுக்குச் செல்ல வேண்டும் என்பதனையே வலியுறுத்துகின்றது. ஒருவர் ஏழையானாலும் சரி செல்வந்தனாக இருந்தா லும் சரி சுத்தமாகவும் சுகாதாரமாகவும் உடை அணிந்து உணவு உண்டு வாழப் பழக வேண்டும் என்பதைக் காட்டுமுகமாக நம் முன்னோர்கள் பின்வரும் பழமொழியை எடுத்துக் கூறுகின் றனர்.

**"கந்தையானாலும் கசக்கிக் கட்டு**
**கூழானாலும் குளித்துக் குடி"**

நோய் வந்தபின் காப்பதை விட நோய் வராமல் பாதுகாப்பதே மேல் என்பதை "வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்" எனும் பழமொழி எடுத்துக் காட்டுகிறது. "எச்சில் இரக்கவைக்கும் தூய்மை துடைக்க வைக்கும்" என்னும் பழமொழியையும் நாம் கருத்தில் கொண்டு நடந்தால் நோய்க்கு நாம் பயப்படத் தேவையில்லை.

மனித விழுமியங்களில் சிறந்ததொன்றாக பொறுமையை இந்துமதம் வலியுறுத்துகின்றது. மகாபாரதம் பொறுமையிற் சிறந்தவனான தர்மன் ஆகியோர் வெற்றி பெற்றமைக்குத் தர்மனின் பொறுமையே காரணமாகும் எனக்காட்டுகிறது.

"பொறுத்தார் பூமியாள்வார்
பொங்கினார் காடாள்வார்"

என்னும் பழமொழியும்

"துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்"
"ஆத்திரக் காரனுக்கு புத்திமட்டு"

என்னும் பழமொழிகளும் இதனை எடுத்துக் காட்டுகின்றன. கோபம் மனிதனை அழிக்கும் ஆறு குணங்களில் ஒன்றாகச் சொல்லப் படுகின்றது.

மக்களது வாழ்வு வளம்பெறத் துணை புரிவனவற்றை சாஸ்திர ரீதியாக நோக்கும் மரபு இந்து மக்களிடையே இருந்து வருகிறது. சாஸ்திரம் மக்களது கண்போன்றது. சாஸ்திரங் களைத் தெய்வீக மரபின் அடிப்படையில் நோக்கும் நிலையும் இந்துப் பண்பாட்டில் உள்ளது. ஒருவர் பிறந்தது முதல் இறப்பு வரை உள்ள காலப்பகுதியில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்விலும் சாஸ்திரம் முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது. இச் சாஸ்திரங்கள் இந்துக்களைப் பொறுத்தமட்டில் வாழ்வியலோடு தொடர்புபட்டதாகவே இருக் கின்றன. மக்கள் சாஸ்திரங்களில் கொண்ட திடமான நம்பிக்கையால் பல சாஸ்திரம் சம்பந்தமான பழமொழிகளையும் தம் அனுபவவாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர் நம் முன்னோர். ஒரு குழந்தை பிறந்த உடனேயே அது பிறந்த நாள் நேரம் ஆகியவற்றைக் கொண்டு அதனது நட்சத்திரம் குறிக்கப்பட்டு சாதகம் எழுதிவைக்கின்றனர். குழந்தைகள் எந்தெந்த நட்சத்திரத்தில் பிறந்தால் நல்லது, கூடாது என்றெல்லாம் நம் முன்னோர் கூறி வைத்துள்ளனர். பழமொழிகள் மூலம் நட்சத் திரங்களின் பலன்களைக் கூறுவதைப்பார்க்கலாம்.

"பரணி பாழ் போகாது"
"பரணி தரணி ஆளும்"
"ஆண் மூலம் அரசாளும் பெண் மூலம் நிர்மூலமாக்கும்"
"பூராடம் ஊசாடத் தீரும்"
"அவிட்டத்தில் பெண் பிறந்தால் தவிட்டுப் பானையும் பொன் ஆகும்"

## முடிவுரை

பழமொழிகள் மாத்திரம் அல்ல உவமைத் தொடர்கள், மரபுத்தொடர்கள், இணை மொழிகள் கூட இந்துமத செல்வாக்கை வெளிப்படுத்திக் காட்டுகின்றன. "கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போல"எனும் உவமைத் தொடர் சந்தியா வந்தனம் செய்யும் இந்துக் களின் வழக்கத்தினையும், நாலூறு, கண்படுதல் போன்ற மரபுத் தொடர்கள் அவர்களது சமய பழக்க வழக்கங்களையும் மந்திர தந்திரம் போன்ற இணைமொழிகள் இந்துக்களின் மாய மந்திரங்களின் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுவதற்கு உதாரணங்களாகும். கற்றவர் மாத்திரமல்லாது மற்றவரையும் இந்துமத வாழ்வியலில் நெறிப்படுத்திக் கொண்டு செல்வதால் கற்றோர் மட்டும் விளங்கும் இந்துசமய அற இலக்கியங்களை விடப் பழமொழிகளின் பங்கும் முக்கியமான தென்பதை ஒருவர் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

பழமொழிகள் இந்துக்களின் வாழ்வை நேற்று நெறிப்படுத்தின இன்று நெறிப்படுத்து கின்றன நாளையும் நெறிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இன்று எமக்கு வாழ்வாங்கு வாழ வழி காட்டுவதில் உலகப் பொதுமறையாம் திருக்குறள் முன்னணியில் நிற்கின்றது.

பரிமேலழகர் உரைதொட்டு இன்று வரை எத்தனையோ உரைகள் அதற்கு எழுந்துள்ளமை, திருக்குறள் கற்றவர்களை மட்டும் மனதில் கொண்டு எழுதப்பட்டது என்பதனைக் காட்டுகின்றது. ஆனால் பாமர மக்களும் வாழ்வில் விளங்கிப் பயன்படுத்தும் பழமொழிகள் கற்றவர்களை மட்டுமன்றி கல்லாதவர்களையும் இந்துமத நெறியில் வழிப்படுத்துவதால் சமூகத்தைக் கட்டி எழுப்புவதில் பழமொழிகள் மேலான நிலையில் உள்ளன எனக் கூறுதல் மிகையாகாது.

## அடிக்குறிப்புக்கள்


1. தனபாலசிங்கன், செ; உபநிடதச் சிந்தனைகள், பராபர வருஷம், உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில், பக்.109.
2. ராமஸ்வாமி, ப; உலகப் பழமொழிகள்
3. சைவத்திருமுறைத் திரட்டு, (1990) சிவதொண்டன் சபை, 434 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
4. தமிழ் நாட்டுப் பழமொழிகள் 2000, தொகுப்பு: செங்கனி, நர்மதா பதிப்பகம்.
5. தற்காலத் தமிழ் மரபுத் தொடர் அகராதி, மொழி கலாச்சார வள மேம்பாட்டு அறக்கட்டளை.
6. திருக்குறள். பரிமேலழகர் உரை, நான்காம் பதிப்பு, 1986, பதிப்பாசிரியர் புலியூர் கேசிகன்.
7. பதினெண் கீழ்க்கணக்கு (இரண்டாம் தொகுதி) பதிப்பாசிரியக் குழுவினரால் பல பிரதிகளை ஒப்புநோக்கிப் பரிசோதித்து வெளியிடப்பெற்றது, வெளியிடுவோர் எஸ். ராஜம்
8. பழமொழி நானூறு, தெளிவுரை ஆசிரியர் பண்டித சிர. சங்கத்து நாராயணசாமி அவர்களின் மாணாக்கர் வித்துவான் மி. பொன். ராமநாதச் செட்டியார், தமிழ் விரிவுரையாளர், சர். தியாகராயக் கல்லூரி, சென்னை.
9. Balasubramanian,K, Ratnamalar,K. and Subathini, R; (1998) ``Studies in Sri Lanka Tamil Linguistics and Culture (Selected Papers of Professor. S.Suseendirarajah) Students Offset Service, Chennai.